தேதி - 26.11.2025.

**Pro.OP**.146/2023

**Pw**.3 - திரு. பிரேம்நாத்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை

நான் ஆடிட்டராக பணியாற்றி வருகிறேன். அமர்நாத் என்னுடைய இளைய சகோதரர். நானும், அமர்நாத்ம் ஒரே அலுவலகத்தில் தான் சொந்தமாக ஆடிட்டர் தொழில் செய்து வருகிறோம். என்னுடைய தகப்பனார் ஆடிட்டர். மனுதாரர்கள், எதிர்மனுதாரர் குடும்பம் எங்களுக்கு சிறுவயதிலிருந்தே பழக்கம். டாக்டர். மகேஸ்வரனுக்கு நானும் என் சகோதரரும் ஆடிட்டராக இருந்து வந்தோம். மனுதாரர்கள், எதிர்மனுதாரரும் சௌராஸ்டிரா வகுப்பினர். ம.சா.ஆ.1 உயில் எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்று கேட்டால் மகேஸ்வரன் வரும்போதே கொண்டு வந்தார். அது யாரால் தயார் செய்யப்பட்டது, டைப் செய்யப்பட்டது என குறிப்பிடப்படவில்லை. அதில் தனியாக சொத்து விபரம் குறிப்பிடப்படவில்லை. ம.சா.ஆ.1 உயிலில் முதல் பக்கத்தில் டாக்டர். மகேஸ்வரனுடைய கையெழுத்து எதுவும் இல்லை. ம.சா.ஆ.1 உயிலில் 2ம் பக்கத்தில் வரிகளுக்கு இடையேயான இடைவெளி சீராக இல்லை என்று சொன்னால் சீராக இல்லை. டாக்டர். மகேஸ்வரனிடம் வருமான வரிகணக்கு சமர்ப்பிக்க பெற்ற கையெழுத்தை வைத்து ம.சா.ஆ.1 உயில் இந்த வழக்கிற்காக எங்களால் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. இந்த வழக்கிற்கு தோதாக இடைவெளி விட்டு தட்டச்சு செய்யப்பட்டு மேற்படி உயில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. சௌராஸ்டிரா சமூகத்தைச்

சார்ந்த நபர்களை 1, 2 மனுதாரர்கள் திருமணம் செய்துள்ளார்கள். எதிர்மனுதாரர் மாற்று சமூகத்தைச் சார்ந்தவரை திருமணம் செய்துள்ளார் என்று சொன்னால் அது சரிதான். எதிர்மனுதாரருக்கு சேர வேண்டிய பங்கை கொடுக்காமல் தவிர்பதற்காக ம.சா.ஆ.1 உயில் இந்த வழக்கிற்காக மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல.

Sd/- பிரேம்நாத்

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

MUTHUKUMARAN Digitally signed by MUTHUKUMARAN Date: 2025.11.29 13:53:27 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

மதுரை.